<u>பத்திரிக்கை செய்தி நாள்.22.05.2023</u>

தமிழ்நாடு முன்னாள் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும், தற்போது புதுக்கோட்டை மாவட்ட விராலிமலை சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான திரு.விஜயபாஸ்கர் அவர்கள், அவர் அமைச்சராக இருந்த **01.04.2016** முதல் **31.03.2021** வரையிலான காலத்தில் அவரது பெயரிலும், அவரது மனைவி திருமதி.ரம்யா மற்றும் அவரது குடும்பத்தினர் பெயர்களில் மொத்தம் **ரூ.27,22,56,736/–** அளவிற்கு வருமானத்துக்கு அதிகமாக முறைகேடாக சொத்து சேர்த்ததாக, புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பிரிவில் குற்ற எண்.04/2021ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. விசாரணையில் 56 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

திரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள் அவரது மனைவி திருமதி.ரம்யாவின் உடந்தையுடன் அவரது பெயரிலும், குடும்பத்தினரின் பெயரிலும் ராசி புளூ மெட்டல்ஸ், V Infrastructure. ராசி என்டர்பிரைசஸ் ஆகிய பெயர்களில் நிலங்கள், தொழில் முதலீடு, வங்கி இருப்புகள், இயந்திர தளவாடங்கள், வாகனங்கள் மற்றும் ஆபரணங்கள் என முதலீடு செய்து மொத்தம் **ரூ.35,79,90,081/–** அளவிற்கு வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளனர்.

மேற்படி வழக்கின் புலன் விசாரணை முடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் அவர்களிடம் இசைவாணை பெற்றும், இன்று 22.05.2023ஆம் தேதி புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் திரு.சி.விஜயாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் திருத்தப்பட்ட ஊழல் தடுப்பு சட்டம் 2018 மற்றும் இந்திய தண்டனைச்சட்டத்தின்படி உரிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

# <u>PRESS NOTE</u>

## <u>Date: 22.05.2023</u>

A case in Cr.No.04/2021 of Pudukkottai V&AC was registered on 17.10.21 against Dr.C.Vijayabaskar, formerly Minister for Health and Family Welfare Department and his wife Tmt.V.Ramya into the allegation of acquisition of assets and pecuniary resources to the tune of Rs.27,22,53,736/- which are disproportionate to their known sources of income and in this regard, a deeper probe was taken up. During the course of investigation, searches were conducted in 56 places and certain incriminating materials/documents were seized.

The investigation disclosed that, Dr.C.Vijaybaskar had acquired assets in the form of bank balances, business investments viz., M/s.Rasi Blue Metal, Rasi Enterprises & V Infrastructure etc., landed properties, Machinery, Ornaments and Vehicles in his name and in the name of his wife Tmt.V.Ramya all to the extent of **Rs.35,79,90,081/-** which are disproportionate to their known sources of income for which they could not account satisfactorily.

After completing the investigation, necessary sanction for prosecution has been obtained from the Honourable Speaker of Tamil Nadu Legislative Assembly and the Charge Sheet was filed today 22.05.2023 before the Honourable Court of Special Judge/Chief Judicial Magistrate Pudukottai against Dr.C.Vijaybaskar and his wife Tmt.V.Ramya under relevant provisions of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 and Indian Penal Code 1860.